Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# தமிழக கட்டிடக்கலையில் தமிழ் மொழியின் விளைவுகள்

- கிருத்திகா சிவநேசன்

18

**ஆய்வு நோக்கம்:**

தமிழ் என்பது உலகிலேயே பழமையான மொழிகளில் ஒன்று எனும் கருத்தை தாண்டி, ஒரு மொழியால் ஒரு சமூகம் தன கலாச்சாரத்தை எப்படி வடிவைத்திருக்கிறது என்பதற்கு தமிழர்களே ஆதாரம். பல சிந்தனைகளை மொழியின் வடிவில் வகுத்து அதை பல தலைமுறைகளும் பின்பற்ற கூடிய வாழியலாகவே மாற்றியது தமிழ் சமூகத்திற்கு உண்டு. இருபத்தியோராம் நூற்றாண்ண்டில் தமிழ்நாட்டில் பல மாற்றங்கள் இருந்தாலும் தமிழர்களின் இத்தகைய வாழ்வு முறையும் அடித்தளம் பல நூற்றாண்டிற்கு முன்பதே வகுக்கப்பட்டொன்றாகும். தமிழ்நாட்டின் சின்னமாகவே கோவில்கள் இருந்தாலும் அதில் பின்னணியில் இருக்கக்கூடும் தமிழ் இலக்கிய தொன்மையும் மொழி அறிவியலும் ஏராளம். இவை இன்றி இன்றைய தமிழ்நாடும் தமிழர்களும் இத்தகைய அறிவுசாரர்கள் பாரம்பரியத்தையும் கொண்டிருக்கும் என்பது சிந்திக்கவேண்டிய ஒன்று. இப்பெருமைக்குரிய தமிழ்நாட்டையும் அதன் மக்கள், மொழி மற்றும் அதன் வாயிலாக வந்த கட்டிடக்கலையும் அதன் சமூக அர்த்தங்களையும் இக்கட்டுரையில் காணலாம்.

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழக வரலாற்றில் மொழியை மையமாக கொண்டு இயற்றப்பட்ட இரு நிகழ்வுகள் தமிழ் சங்கங்கள் மற்றும் பக்தி இயக்கமாகும். இவை இரண்டும் தமிழ் மொழியின் ஆற்றைலைக்கொண்டு பல தொண்மை மற்றும் ஆழமான கருத்துக்களை தினசரி வாழ்வியல் புலவர்கள் மற்றும் எழுத்தாளர்களால் மாற்றப்பட்டு தமிழ் சமுதாயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இதுவே வரலாற்று பெருமையை அடைந்த தமிழ் சமூகமாகவும், தமிழர்கள் இயற்றிய ஆட்சியாகவும் கட்டமைப்பாகவும் இன்றும் நம் கண்களின் முன் திகழ்ந்து வருகிறது. இந்த சமூக நம்பிக்கையை மற்றும் ஆட்சியை செயல்படுத்த கட்டுமானத்தை பொறுத்தளவில் அணைகள், ஏரிகள், நகர வளர்ச்சி என பலவற்றை உள்ளடிக்கிருந்தாலும் கோவில்கள் ஏற்படுத்திய சமூக விளைவுகள் எண்ணற்றவை. இந்த கட்டுரை கோவில்களை மட்டும் அடிப்படையாக கொண்டு, தமிழ் மொழி மூலம் சமுதாயம் எவ்வாறு செயற்பட்டது என்பதற்கு கோவில்களை ஆதாரமாக வைத்து எழுதப்படுகிறது.

**திறவுச் சொற்கள்:**

தமிழகம், தமிழ்நாடு, பக்தி இயக்கம், நாயன்மார், ஆழ்வார்

**முன்னுரை:**

தமிழ்நாடு அல்லது தமிழர்கள் என்று கூறினாலே பெரும்பாலும் ஒருவரின் சிந்தனையில் தோன்றக்கூடியது கோவில்களும் அதில் அமைக்கப்பட்டுள்ள கோபுரங்களும். இன்றைய

காலகட்டத்தில் தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியும், மற்ற துறைகளில் வளர்ச்சியும், கட்டுமானத்தில் எவ்வளவோ மாற்றத்தை கொண்டிருந்தாலும், பல்லாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கோவில்களே அடையாளமாக இன்றும் காணப்படுகின்றன.

கோவில்கள் என்பவை மதம் மற்றும் தெய்வ வழிபாட்டின் கட்டுமானமாக இருந்தாலும், அதன் பின்னணியில் தமிழர்களின் சமூக கலாச்சாரம் பின்னிப்பிணைந்தொன்று என்பதை நம்மால் மறுக்க முடியதொன்றாகும். இந்த சமூக கலாச்சாரம் என்பது பலவற்றை அங்கமாக கொண்டே அமைந்திருக்கும். பல நூற்றண்டிக்கிற்கு முன்பாக இருந்தே ஆன்மிகம், மத வழிபாடு, சமூகவியல் மற்றும் அடுத்து வந்த நூற்றாண்டுகளில் பொருளாதாரம் மற்றும் மனித மேம்பாடுகளை அங்கமாக கொண்டு வளர்ந்துள்ளன. இவ்வணைத்திற்கும் அடையாளமாக கோவில்கள் திகழ்கின்றன என்று கூறினால் மிகையாகாது. இக்கட்டுரையில் இந்த கோவில்களின் கட்டுமானங்களை பற்றி மட்டும் விவரிக்கலாம், ஒவ்வொரு காலகட்டத்திலும் கோவில்கள் கொண்டிருந்த அமைப்பு மற்றும் வடிவத்தின் காரணங்களை மொழி மற்றும் மதம் அல்லது சமூக நம்பிக்கை வாயிலின் கண்ணோட்டத்தில் காணலாம்.

**பொருளுரை:**

**தமிழ் சங்கம் மற்றும் தமிழ் பக்தி இயக்கம்:**

தமிழ் சமூகத்தையும் அவர்களின் கட்டுமானத்தையும் அன்றைய தமிழகத்தில் நடந்தேறிய இரண்டு முக்கிய நிகழ்வுகளின் அடிப்படையிலும்; அதற்கு பின்னர் இவற்றால் சமூகத்தில் என்ன மாற்றங்கள் இருந்தன என்பதை மையமாக கொண்டு இக்கோணத்தில் பார்ப்போம். இவை தமிழ் சங்கம் மற்றும் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்டு, பிறகு மற்ற இந்திய மாநிலங்களுக்கும் பரவிய பக்தி இயக்கம். இவ்வரண்டு நிகழ்வுகளும் தமிழகத்திற்கு மைல்கற்களாக விளங்கியது மறுக்கமுடியதொன்றாகும்.

தமிழ் சங்கங்கள் மூன்று உள்ளன. இதில் முதலிரெண்டிற்குமான ஆதாரங்களும் இலக்கியங்களும் அழிந்துவிட்டதாகவும், சில ஆதாரங்கள் மட்டுமே உள்ளதாக சொல்லப்படுகிறது. மூன்றாம் தமிழ்ச் சங்கம் தான் இவற்றில் பெரிய சங்கமாகும். பல புலவர்களையும் எழுத்தாளர்களையும் கொண்டு கி.பி மூன்றாம் நூற்றாண்டிற்கு பிறகு இயக்கப்பட்டுள்ளது. இந்த சங்கத்தில் பகுதியாகத் தான் தமிழ் சங்க இலக்கியங்கள் பல நூறாண்டுகளாக இயற்றப்பட்டுள்ளன. இந்த இலக்கியங்களே தமிழர்களில் வாழ்வை பிரதிபலிக்கும் ஓர் அங்கமாக இக்காலம் வரை இருந்து வருகிறது.

அடுத்ததாக பக்தி இயக்கமும் கி.பி மூன்றாம் நூற்றாண்டிற்கு பின்னர் தமிழகத்தில் நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது அக்காலக் கட்டத்தில் பௌத்த மற்றும் சமண மதங்களின் வளர்ச்சி மற்றும் இந்து மதத்தின் வீழ்ச்சியை எதிர்த்து இரண்டு பேரவைகளாக இயற்றப்பெற்றுள்ளது. அது மட்டுமின்றி அக்காலகட்டத்தில் பல்லவ மன்னர்களில் ஆட்சியின் கீழ் சாதி வேறுபாடு மேலோங்கப்பட்டதையும், இறை வழிபாட்டை சராசரி மனிதனுக்கும் எடுத்து செல்லும் வழியில் அமைக்கப்பட்டதாகும்.

மேல்கூறப்பட்ட இரு இயக்கங்களும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் நடந்ததை அடுத்து, இவற்றின் தாக்கம் தமிழகத்தில் ஒன்றோடொன்று ஒத்துள்ளன.

**பக்தி இயக்கத்திற்கு பின்:**

பக்தி இயக்கம் பல்லவ அரசர்களின் காலத்தில் தோன்றியது. பல்லவ ஆளுமையில் கீழ் தான் கட்டிடக்கலை என்பது தன் உச்சத்தை எட்ட ஆரம்பித்த காலம் ஆகும். பாறைகளிலிருந்து கோவில்களை செதுக்கிய பாராட்டு பல்லவர்களையே சேரும். இதற்கு ஆதாரமாக மகாபலிபுரம் மற்றும் காஞ்சி கோவில்களே சான்று. இவர்களை பின்தொடர்ந்து சோழர்களும் சேரர்களும் பிரம்மாண்ட கோவில்களை தமிழகத்தில் அமைத்தனர். இவை அனைத்தும் பிரம்மாண்டம் என்ற கருத்தை தாண்டி மற்ற சில கருத்தியல்களின் தாக்கத்தாலும் இத்தகைய அமைப்பை கொண்டிருக்கிறது.

முதலாவதாக, பக்தி இயக்கம் ஓர் தனி மனிதனின் நேரடியான இறை வழிபாட்டையே போதித்தது. இதில் ஒருவருக்கும் கடவுளுக்கும் உரையாட பிராமண ஆசாரியர்கள் தேவை இல்லை என்றும், தனிமனித இறை நம்பிக்கையே போதுமானதென்று நாயன்மார்களும் ஆழ்வார்களும் அவர்களில் போதனை மற்றும் பாடல்களில் கூறினர். இதை அடுத்தே தமிழகத்தில் பல சிவன் மற்றும் விஷ்ணு ஆலயங்கள் கட்டப்பட்டன. இறை நம்பிக்கையின் அளவை காண்பிக்க மன்னர்களும் இக்கோவில்களை பிரம்மாண்டமாக அமைத்தனர். இது பக்தி இயக்கத்தின் விளைவாக இருந்தாலும், தமிழரின் வாழ்வு முறையும் சமூக நம்பிக்கையும் மையப்புள்ளியாக இருந்திருக்கின்றன. இவற்றின் ஆதரங்களையே நாம் நம் சங்க இலக்கியங்களிலும் காண முடிகிறது. நம் இலக்கியங்கள் அகம் மற்றும் புறம் என்று இரண்டு வழி பட்டவை. அகம் என்பது ஒருவரின் மனது, தனித்துவம் மற்றும் ஒருவர் வழிநடக்கும் விதத்தை குறிப்பிடுவதாகும். புறம் என்பது சமூகம், குடும்பம், அரசவை, போர், சமுதாயம் போன்றவற்றை குறிப்பிடும்.

புறம் என்பதில், பொருளாதாரம், சமூக வழிபாட்டையும் தாண்டி இலக்கியங்களில் கூறப்படும் இயல், இசை, நாடகமும் முக்கிய அங்கமாகும்.

மேற்கூறப்பட்ட இவ்விரண்டு இயக்கங்களின் உதாரணமாக நாம் திருச்சி ஸ்ரீரங்க ஆலையத்தையே கூறலாம். பக்தி இயக்கத்தின் பின்னர் ஆழ்வார்களின் விஷ்ணு வழிபாட்டை கொண்டு பக்தியின் ஆதாரமாக கட்டப்பட்ட கோவில். இது வெறும் ஆலயமாக இல்லாமல் கோவில் வளாகமாக வடிவமைக்கப்பட்டது. மக்கள் முன்னேற்றத்திற்காகவும் அவர்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்தும் நோக்கத்திலும் பொற்களஞ்சியங்கள், தானிய கிடங்குகள், நீர் சேமிப்பு குளங்கள் அனைத்தையும் வளாகத்திற்குள் வடிவமைக்கப்பட்டது. மக்களின் அன்றாட வாழ்க்கையும் கோவிலை சார்ந்தே அமைந்தது. இதையடுத்து இசை, நாடகம், நடனம் அனைத்தும் மேம்பட்டன. கோவில்கள் ஆலையமாகமட்டுமில்லாமல் வாழ்வின் அங்கமாக மாறியது. இவற்றையே நாம் நம் சங்க நூல்களிலும் பார்க்க முடியும். இத்தகைய வடிவைப்பு மற்றும் வாழ்வியல் பிற மாநில கோவில் கட்டுமானத்திலிருந்து மாறுபட்டன. தமிழ் மொழியே இத்தகையே வாழ்வியல் வடிவத்தை ஏற்பாடு செய்ய காரணமாக இருப்பதை நம்மால் பார்க்க முடியும். ஆனால் இத்தைகைய கட்டுமானத்திற்கு மிகவும் முக்கியமாக

இருந்தது அந்த நூற்றாண்டுகளில் இருந்த அரசாங்கத்தின் பலம், அவர்களின் பொருளாதார வளர்ச்சி மற்றும் கலை நயத்தின் நுணுக்கம் ஆகியவற்றிற்கும் இதில் பங்களிப்புள்ளது.

**சங்க கால தமிழகம்:**

தமிழகத்தின் கலைநயம் மற்றும் பிரம்மாண்டமான கோவில்களின் வளர்ச்சியை அக்காலத்து அரசர்களின் ஆட்சியின் கீழ் கட்டப்பட்டதையும் அவற்றின் கட்டுமான வடிவத்தின் காரணங்களையும் பார்த்தோம். ஆனால் இந்த கோவில்களுக்கு அடித்தளமாக கருதப்படும் கோவில்கள் இவற்றிற்கும் முன்னதாகவே கட்டப்பட்டு, எண்ணிக்கையிலும் அதிகமாக இன்று வரை திகழும் கிராம மற்றும் குலா தெய்வ கோவில்களே ஆகும்.

இவை தமிழர்களில் இறை மற்றும் சமூக வழிபாடுகளை பிரதிபலிக்கிறது. அக்காலக்கட்டத்திலிருந்து நடைமுறையில் இருந்த குல தெய்வ வழிபாடு இன்றும் காணப்படுகிறது. இத்தைகைய கிராம கோவில்கள் அளவு மற்றும் கட்டுமானத்தில் சிறிதாக இருந்தாலும் பெரும்பாலும் அனைத்து கிராமங்களிலும் இருக்கும். இக்கடவுள்களை கிராமத்தையும் மக்களையும் அவர்களின் விவசாய நிலங்கள் மற்றும் கால் நடையை காக்கும் தெய்வமாக வழிபட்டனர். குல தெய்வம் மட்டுமின்றி, தன் மக்களுக்காகவோ நாட்டிற்காகவோ உயிர் தியாகம் செய்த போராளிகளுக்கும் கோவில் கட்டி வழிபட்டதை பார்க்க முடியும். கிராம திருவிழாக்கள் இந்த கோவில்களை மையமாக கொண்டே அமைந்திருக்கும். இவற்றை சுற்றி பாடல்களும், நெறி கதைகளும் அமைந்திருப்பதின் ஆதாரங்களை இலக்கியங்கள் கூறுகின்றன.

பல்லவ சாம்ராஜ்யத்திற்கு முன்னர் சாதி அடிப்படையில் தமிழ் சமுதாயமும் இயங்கவில்லை; நிலங்களை ஐந்து திணைகளாக பிரித்து, அதற்கேற்றாற்போல் வாழ்வாதாரத்தை இயக்கி, அவையே மனித குலங்களாக பிரிக்கப்பட்டு இயங்கி வந்தன. (திணைகளில் மலையும் மலை சார்ந்த பகுதி குறிஞ்சி, காடும் காடு சார்ந்த பகுதிகள் முல்லை, வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல், மலைகளுக்கும் காட்டிற்கும் இடையில் அமையப்பட்ட பாழ் நிலம் பாலை என்றும் அழைக்கப்பட்டது). திணை என்றல் ஒழுக்கம் என்று பொருள். இலக்கியவடிவில் கூறும்பொழுது புறத்திணைக்கு இவ்வைந்து நிலங்களில் பண்புகளும் அவற்றின் வாழ்வியல் விளைவுகளையும் பார்க்க முடியும். இவற்றில் இந்நிலங்களில் வசிக்கும் உரியவர்களுக்கு, ஊர், நீர், விளங்ககுகள், அவ்வனைத்தையும் காக்கும் தெய்வம் ஆகியவை கருப்பொருள் என்று அடங்கும். அகத்திணையை பொறுத்தளவில் இவை இலக்கிய கோட்பாட்டிற்காக கூடல், இருத்தல், ஊடல், வருந்துதல், காத்திருத்தல் என மனஉணர்வுகளை கொண்டு உரிப்பொருளாக இயற்றப்பட்டுள்ளது.

இத்திணை நிலங்களுக்கு ஏற்றாற்போல் தெய்வங்கள் இருந்தாலும், குறிஞ்சி நிலத்தில் போற்றப்படும் முருகன் பெரும்பாலும் தமிழகம் முழுவதிலும் போற்றி வழிபட்டதிற்கு ஆதாரங்கள் உண்டு. முருகனை தமிழ் கடவுள் என்றும் கூறுவார்கள். பல்லவ மன்னர்களுக்கு முன்பே கட்டப்பட்ட கோவில்கள் பல முருகன் வழிபாடுள்ளவையாக இருந்தன. இவை பெரும்பாலும் செங்கற்களால்

கட்டப்பட்டவை. இந்த முருகனையே இரண்டு தமிழ் சங்கத்தை இயற்றியவராகவே தமிழர்கள் பார்கின்றனர். உலக புகழ் பெற்ற முருகனின் ஆறுபடை வீடுகளுள் இன்றைய தமிழ்நாட்டில் தான்அமைந்துள்ளது.

இதிலிருந்து, இலக்கியம், வாழ்வு முறை, மொழி மற்றும் வழிபாடை தமிழர்கள் ஒன்றிணைத்து இன்றும் வாழ்வியல் வெளிப்பாடாக சமுதாயத்தை இயற்றியது ஆச்சிரியத்துக்குட்பட்டவை. இத்தைகைய வழிபாட்டிற்கும் நம்பிக்கைக்கும் பின்னர் பல வேத முறைகள் உள்ளடங்கியுள்ளது.

முருகன் குறிஞ்சி நிலைத்து கடவுள். அக்காலத்தில் குறிஞ்சியே புகழ் பெற்ற திணையாக விளங்கியது. அறிவியல் கோணத்தில் பார்க்கும் பொழுது, குறிஞ்சி நிலம் தான் அதிக மழைக்கு வாய்ப்புள்ள பகுதி. மலைகள் சமதளமான நிலங்களுக்கு மழையை சேமித்து விநியோகிக்க கடற்பாசியாக செயல்படுகின்றன. இதை நம்பியே மற்ற நிலங்களும் செயல்பட்டு வந்தன. இத்தைகைய நிலத்திற்கு அதிக முக்கியத்துவம் இருந்தது. இந்த நிலத்தின் கடவுளான முருகனே பெரும்பாலும் வழிபடப்பட்டார்.

வேதங்கள் மற்றும் ஆண்மீக கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது, முருகனை போற்றக்கூடிய ச-ர-வ-ண-ப-வ எனும் சொல் ஆயுர்வேதம் மற்றும் யோக கலைகளில் கூறப்படும் மனித உடலில் இருக்கும் ஏழு பெரும் ஆற்றல்களின் அதிர்வலைகளை குறிக்கும் சொல்லாக அமையப்பட்டுள்ளது. நெறியுடன் வாழ்ந்து வந்தால் ஆறு சக்கர ஆற்றல்களையும் கடந்து இறைவனை உணர்ந்து பெருவாழ்வை அடைய முடியும் என்பது வேதங்கள் கூறும் உண்மை. இதை தியானம், யோகா பயிற்சி மற்றும் சாதனங்கள் கொண்டு அடையாலம். இக்காலத்தில் இது பெரும்பாலாக பின்பற்றப்படுவதை பார்க்க முடிகிறது. இத்தகைய ஆழத்தை கொண்டுள்ள அறிவியலை இறை வழிபாடாக மறுவித்து, இவற்றை மூடநம்பிக்கையாக மற்றும் போதிக்காமல், சமூகத்தின் ஓர் அங்கமாக மருவித்த பெருமை தமிழர்களை சேரும்.

**முடிவுரை:**

கட்டுமானம் என்பவை காலத்தை தாண்டி நின்று, வரலாற்றின் பெருமையையும், அது ஒரு விதமானது அமைப்பு, கட்டப்பட்ட காரணங்களை ஒட்டி, ஒரு சமூகத்தின் அமைப்பையே ஆய்வு செய்ய உதவியாக கோல்களாக இருக்கின்றன. இதே போன்று இலக்கியங்களும் இத்தகைய ஆய்வை மேற்கொள்ள உதவும் வரலாற்றுச் சான்றாக உள்ளன. இவை இரண்டும் சேர்ந்து தமிழ் சமுதாயத்தை வடிவமைத்துள்ள அமைப்பு பாராட்டக்கூடியவை.

மொழி என்பது உரையாடலை தாண்டி, ஒரு வரலாற்றை சிறப்பாக உருவாக்க உதிவியாக இருக்கும் என்பதை தமிழ் சமுதாயத்தில் மூலமாக பார்க்கலாம், இதற்கு ஆதாரம் நம் கோவில்கள். தமிழ் பின்னணினியில் கட்டப்பட்ட காரணத்தினாலே, இவை மற்ற மாநில இந்து கோவில்களிலிருந்து வேறுபாடாக, தமிழ் சமுதாயத்தின் ஆதாரமாக திகழ்கின்றன.

**துணைநூற்பட்டியல்:**

1. தமிழ் தமிழர் தமிழ்நாடு - டாக்டர் தீபக் தாமஸ்

**2.** குமரிக்கண்டமா சுமேரியமா- தமிழகத்தின் தோற்றாலும் பரவலும் - பா பிரபாகரன்

**மேற்கோள்கள் மற்றும் பார்வை நூல்கள்:**

1. The living culture of the tamils – S. Ramakrishnan
2. History and Culture of India – Tamilnadu
3. https://en.wikipedia.org/wiki/Tamil_Sangams
4. https://kaumaram.com/k_puranam/index.html
5. The temple base of the Bhakti movement in South India – Kesavan Veluthat
6. https://tamilandvedas.com/2012/03/20/three-tamil-sangams-myth-and-reality-2/